**பிங்கிரிய பிரதேச சபை**

**குருநாகல் மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிங்கிரிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 1,938,896 இற்கான சம்பள மீளளிப்பு, கடன்பட்டோர்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் ஒதுக்கமாக நாட்குறிப்பு இலக்கம் 86 இன் மூலம் ரூபா 12,120,837 தொகை ஒன்று ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதில் மயாணப் பாதை அபிவிருத்திக்காக 2013 ஆண்டின் போது கடன்கொடுத்தோர்கள் என ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 500,000 வும் அடங்கியிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் செலவு கடன்கொடுத்தோர் ரூபா 500,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 5,361,250 இற்கான 73 பழைய கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளாக பதிவழிக்கும் போது குறிப்பிட்ட பெறுமதியை கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைத்து திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் நாட்குறிப்பு இலக்கம் 83 இன் மூலம் திரண்ட நிதியம் செலவு

வைக்கப்பட்டு ஆண்டிற்கான செலவுக் கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 5,361,520 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 7,480,000 இற்கான கடன்கொடுத்தோர் பெறுமதியை பதிவழிக்கும் போது அதனோடு தொடர்புடைய 82 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவில் அதனை ரூபா 8,830,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் ரூபா 1,350,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 07 நிர்மாண வேலைகள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 6,911,522 இற்கான கடன்கொடுத்தோரை கணக்கீடு செய்யும் போது நாட்குறிப்பு இலக்கம் 87 இன் மூலம் மூலதனப் பெறுவனவுகள் வரவு வைக்கப்பட்டு நிர்மாண வேலை கடன்பட்டோர் செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 13,823,044 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிர்மாண வேலை கடன்பட்டோருக்காக 2014 ஜனவரியில் பெற்றிருந்த ரூபா 250,000 தொகையினை ஆண்டிற்கான வருமானம் என காட்டப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தவணைப் பணம் ரூபா 142,005 தொகை எனினும் வருமானச் செலவுக் கணக்கிற்கு ரூபா 202,007 தொகை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 60,002 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் மீதியினை உறுதி செய்யும் சான்றிதழின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஓய்வூதியக் கணக்கின் மீதி ரூபா 3,643,914 தொகை எனினும் கணக்குகளில் அவை ரூபா 3,705,340 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் ரூபா 61,426 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2013 ஆண்டின் போது நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த ரூபா 1,739,200 இற்கான டிரக்டர் மற்றும் 02 டெய்லர் வண்டிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்யப்படாமையால் நிலையான சொத்துக்கள் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2014 பெப்ரவரி மாதம் மூலதனச் சொத்துக்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு (304) இற்காக எழுதியிருந்த ரூபா 380,880 இற்கான காசோலையை இரத்துச் செய்யும் போது குறிப்பிட்ட செலவு விடயத்திற்கு செலவு வைக்கப்படாமல் 2014 மார்ச் மாதம் மீண்டும் அறவீடு செய்தல் (3/34) வருமானக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவுகள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடு இடையே ரூபா 12,832,769 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 தொங்கல் கணக்குகள்

------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் தன்மையுள்ள கணக்குகளில் வரவு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 2,774,954 ஆகக் காணப்பட்டதுடன் 2014 ஜூன் 30 திகதி சமர்ப்பித்திருந்த திருத்தப்பட்ட ஐந்தொகையின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,486,985 ஆகும்.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

--------------------------------------------

i. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 27,558,557 ஆகும். அவற்றில் ரூபா 1,614,964 தொகை 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

ii. பெற வேண்டிய கணக்குகள் என காணப்பட்ட ரூபா 28,583,262 இற்கான வருமானக் கடன்பட்டோர்களில் ரூபா 2,774,954 இற்கான தொங்கல் கணக்கு மீதி ஒன்று மற்றும் ரூபா 20,927,847 இற்கான பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண மீதி ஒன்றும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------

i. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 31,881,302 ஆகும். ரூபா 16,218,046 தொகை ஒன்று 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

ii. செலுத்த வேண்டிய கணக்குகளில் காணப்பட்ட ரூபா 23,017,467 இற்கான கடன்கொடுத்தோரில் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,705,340 வும் காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 11,895,927 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,659,057 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய

வருமானம் ரூபா 10,120,509 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,538,548 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 13,556,581 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 37,092,035 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 11,876,397 இற்கான பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

--------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 70,468,510 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 57 என ரூபா 39,976,207 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 1,356,580 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களினால் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கியிருந்த பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 58,809,453 தொகையில் பொதுவாக நூற்றிற்கு 55 என ரூபா 32,244,169 தொகை தனிப்பிட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 75 என ரூபா 24,360,497 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்று வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் மூலதனச் செலவு ஆகிய ரூபா 37,092,035 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 40 ஆகிய ரூபா 14,884,923 தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்கள் அடங்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வாடகை

------------------

சபைக்குச் சொந்தமான இரண்டு வர்த்தக தொடர் கட்டிடங்களில் 19 கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 97,863 இற்கான நிலுவையொன்று காணப்பட்டதுடன் அவற்றில் 05 கடைகள் தொடர்பாக 06 தவணைப் பணம் முதல் 27 வரையும் ரூபா 70,645 நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. இந்த நிலுவை 2015 ஜுலை அளவில் ரூபா 61,099 தொகை வரை குறைந்துள்ளது.

2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 20,927,848 ஆகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

----------------------------------------

மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருந்த ரூபா 400,000 பெறுமதியான 07 நலன்புரி விடயங்களும் ரூபா 10,330,000 பெறுமதியான 51 மூலதன விடயங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

2011 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை 01 வருடத்திற்கு 03 இற்கு இடைப்பட்ட காலம் முதல் காணப்படும் ரூபா 158,142 இற்கான 10 வைப்பு மீதிகளினை தீர்க்கப்படாமல் பலவின வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதே போல் உள்ளூராட்சி பற்றிய இலங்கை நிறுவனத்தின் மூலம் 2011 பெப்ரவரி 28 திகதி வழங்கியிருந்த ரூபா 390,000 தொகையினை தீர்க்கப்படாமல் திரண்ட நிதிய வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------

சபையினால் 02 கொங்கிரீட் அச்சுக் கற்கள் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் அதனது முற்றத்திற்காக ரூபா 587,350 தொகையொன்று செலவிடப்பட்டு 2013 மார்ச் முதல் கொங்கிரீட் அச்சுக்கள் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது 2014 ஜனவரி முதல் நிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 587,350 இனை விட கூடிய பெறுமதியுடைய 02 அச்சுகள் இயந்திரங்கள் அந்த முறையும் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

3.4 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------

ஈமக் கிரிகைகளுக்காக 3 கூடாரங்கள் கொள்வனவு செய்வதற்காக 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 200,000 தொகையொன்று நிறுவனம் ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. கூறுவிலை கோரப்பட்டிருக்கவில்லை அத்துடன் தேவையான அங்கீகாரம் ஒன்றினைப் பெற்றிருக்கவில்லை. கணக்காய்விற்கு கிடைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 02 வெயில் மழை மறைத்த குடில்கள் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

04. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுமையும்

--------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் மீண்டுவரும் செலவுகளில் வழங்கல்கள் மற்றும் உபகரணங்களுக்காக ரூபா 6,347,670 இற்கான ஏற்பாடுகள் காணப்பட்ட போதும்

உள்ளவாறான ரூபா 8,973,542 தொகை செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 2,625,872 இற்கான மிகைத்தல் அவதானிக்கப்பட்டது.

05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்